மகாமஹோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.
XX A.37²
2593
Roll-117
1249

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

இரண்டாம் தொகுதி.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR MADRAS-41

பத்திராதிபன்:— பண்டித, அரங்கராமாநுஜன்.

மதுரை,
ஹரிஸமய திவாகர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

ரக்தாக்ஷி— குரோதன.

1925—1926.

ஸ்ரீ:

இரண்டாம் தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அக்ராஸனர் முடிவுரை:-		9
அருளிச்செயலும் வியாக்யானங்களும்:-	ப. அ.	43, 91
ஆத்மா:-	,,	199
ஈசுவரஸௌந்தர்யம்:-		153
உபந்யாஸஸங்க்ரஹம்:-	ஸ்ரீமாந். குமாரசாமி செட்டியார் வக்கீல் சேலம்.	25
உபநிஷத்விவரணம்:-	ஸ்ரீ. உ. வே. எம்பார் கிருஷ்ணமாசார்யார் ஸ்வாமி.	121
உபயவேதாந்த ஐககண்ட்யம்:-	ஸ்ரீ. உ. வே. தேசிகவரதாசார்ய ஸ்வாமி.	49
ஓர் எதிருரை:-	ப. அ.	291
கொல்லிப்பாவை:-	ஸ்ரீ. உ. வே. T. N. அப்பணையங்கார் ஸ்வாமி.	108
கோயம்புத்தூர், ராமாநுஜஸித்தாந்த ஸபையின் வருஷோத்ஸவம்:-		189
சரீரஸம்பந்தம்:-	ப. அ.	157
ஸத்ஸம்ப்ரதாயம்:-	,,	223
ஸர்வேசுவரனது சரணாகதரக்ஷணவ்ரதம்:-	ஓர் வைஷ்ணவன்	5
ததீய சேஷத்வம்:-	ப. அ.	180
ததீயாராதனம்:-	... ...	206
தர்மம்:-	ஸ்ரீ. உ. வே. T. N. அப்பணைய்யங்கார் ஸ்வாமி.	175

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
திருக்குறட் பொதுமை:-	ப. அ.	233
திருமண்காப்பு வைபவம்:-	ஸ்ரீமாந் S. A. கள்ளபிரான்பிள்ளை.	81
தெய்வவணக்கம்:-	ப. அ.	128
நமது பத்திரிகை:-	... ...	1
நன்கொடை:-	... ...	93, 192, 242
நல்லொழுக்கம்:-	... ...	285
நூல்:-	ப. அ.	139
பாகவத உச்சிஷ்டம்:-	... ...	236
பெரியதிருவடி:-	... ...	69
மங்களவாழ்த்து:-	ஸ்ரீ. உ. வே. T. K. ராமாநுஜையங்கார் ஸ்வாமி.	4
மதிப்புரை:-	ப. அ.	94, 144, 168
முனையதரையர்:-	ஸ்ரீ. உ. வே. T. N. அப்பனையங்கார் ஸ்வாமி.	145
ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை:-	ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி.	14, 31, 61, 73, 97, 165, 193, 217, 275
வாமனவைபவம்:-	ப. அ.	113
வாஸிவத ஸமாதானம்:-	,,	243
ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமை:-	ஸ்ரீ. உ. வே. வேங்கடாசார்யார் ஸ்வாமி.	18, 135, 149, 280
ஸ்ரீவைஷ்ணவ தத்வதிவாகரம்:-	ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருமாலிருஞ்சோலை ஜீயர்ஸ்வாமி.	38, 56, 78, 103, 162, 213, 229
இரண்டாந் தொகுதியில் வெளிவந்த புஸ்தகம்:-	இராமாயணத் திருப்புகழ்.	2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 பகுதிகள்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41
R 11-117
1249

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. ரக்தாக்ஷிஹு தைமீ பகுதி க.

Vol. 2. JANAUARY–FEBRUARY 1925. No. 1.

நமது பத்திரிகை.

சென்ற மார்கழிப்பகுதியுடன் நமது திவாகரத்தின் முதல் தொகுதி முற்றுப் பெற்றது. இனி அதன் இரண்டாந் தொகுதியை ஆரம்பிக்கும் நிலையில் முன்னுரையாகச் சிலவிஷயங்கள் இங்கே சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது.

கடந்த ஒருவருஷகாலமாக ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்தில் நமது பத்திரிகையாலுண்டாயிருக்கும் நன்மையைக் குறித்துப் பலரும் பாராட்டிவருவது நமக்கு மிகுந்தசந்தோஷத்தைத்தருகிறது. பத்திரிகையிலுள்ள விஷயத்தைக் கொண்டே அதைப் பலரும் நன்குமதிக்கிறார்களாதலால் அப்பெருமைமுழுவதும் அதற்கு விஷயதாநம்புரியும் பெரியோர்களுக்கே உரியதாகும். ஒவ்வொரு சஞ்சிகையிலும் சுமார் 1500 பிரதிகட்குமேல் செலவாகிவருகின்றன. இன்னும் பலர் இதனைவாங்கி வாசித்துப் பயனடைய வேண்டியதற்கான முயற்சியை இவ்வருஷத்திலும் இடைவிடாது செய்யக்கருதியுள்ளோம்.

உயர்ந்த விஷயங்களை இன்னும் எளியமுறையில் எழுதிவர வேண்டுமென்று சிலர் எண்ணுவதாகத் தெரிகிறது. இனிவரும் பகுதிகள் கூடியவளவு அம்முறையிலுஞ் சீர்திருத்தம் பெறலாம். ஆயினும் நமது நேயர்கள் எவ்வாறாயினும் தமது கல்விவளர்ச்சியிற் பாடுபட்டுக் கடினமானவிஷயங்களையும் சுலபமாக அறியும்படி பயிற்சியுடையவர்களாக வேண்டுமென்பதே நமது கருத்து.

பத்திரிகையில் விஷயதானஞ்செய்பவர்களுக்குத் தக்கபடி உபகரிக்க வேண்டுமென்ற எண்ணமுண்டு. ஆனால் அதற்கேற்ற பொருள் வருவாயில்லை. பரோபகாரசீலர்களாய் ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பாராத பெரியோர்களே முன்போலவே இதற்கு விஷயங்கள் எழுதிவருமாறுபலமுறையும் வேண்டிக்கொள்கிறோம்.

நிற்க, பொதுநலத்தை விரும்பிச்செய்யப்படும் நன்முயற்சிகள் எல்லாவற்றிலும் பல இடையூறுகளுண்டாவது உலகவியற்கை. நமது திவாகரத்தைப் பிரசுரிப்பதிலும் அவ்வியற்கை மாறுபடவில்லை பத்திரிகையைவாங்கிப் படிப்பவர்கள் பலராயினும் பணஞ் செலுத்துபவர் மிகச் சிலரேயாவர். அநேகர் சந்தாத்தொகையைச் சரிவர அனுப்பி உபகரியாத குறையினால் பத்திரிகையிலிருந்து ஊதியம் சிறிதுங்கிடைக்கவில்லை. ஆனாலும் அதனால் அதிகநஷ்டமில்லாமையே மிகவும் சந்தோஷிக்கத்தக்கதாயிருக்கிறது. ஒரு நல்ல விஷயத்தில் உபயோகமாகும்படி வருஷத்திற்கு ஒருமுறை இரண்டுரூபா செலவிடுவதானால், அது இக்காலத்தில் எவ்வளவு ஏழையாயிருப்பவர்களுக்கும் இயலாததன்று. அவ்வாறிருந்தும், ஒருவருஷமுழுவதும் பத்திரிகைகளை வாங்கிக்கொண்டு இன்னும் சிலர் சந்தாத்தொகையை அனுப்ப மனமில்லாதிருக்கிறார்களென்பதை இங்குவெளியிட்டுச் சொல்ல வெட்கமுந் துக்கமும்உண்டாகின்றன.

இப்பத்திரிகையிலிருந்து இனிக்கிடைக்கும் லாபத்தை ஸம்ப்ரதாய வளர்ச்சிக்கான தருமவழிகளிலேயே செலவுசெய்ய உத்தேசித்திருப்பதால், இதனைவாங்குவோரனைவரும் புஸ்தகமும் புண்ணியமும் ஒருங்கே அடையக்கடவராவர். ஆகையால், ஸ்ரீ வைஷ்ணவசமூகத்தினர் ஒவ்வொருவரும் தம்மாலியன்றவரை சந்தாதார்களைப் புதிதாகச் சேர்த்து உதவிபுரியுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். அன்றியும், ரூபா இருபத்தைந்து முன்பணமாக அளிப்பவர்கள் இப்பத்திரிகையின் சாசுவத அபிமானிகளாக மதிக்கத்தக்கவராவார்கள். அவர்களிடமிருந்து வேறு சந்தாப்பணத்தை விரும்பாமலே ஆயுட்காலம்வரை அவர்கட்குப் பத்திரிகை அனுப்பிவரலாகும்.

அது நிற்க, அநேக விதமான அசந்தர்ப்பங்களால், நமது திவாகரப்பகுதிகளை உரிய காலங்களில் வெளியிட முடியாதிருந்த குறைக்கு மிகவும் வருந்துகிறோம். மேற்குறித்த இடையூறுகளில் முக்கியமானதும் அதுவே யாகும். அதனை நீக்குவதற்காக முன்னரே குறிப்பித்திருந்தபடி குரோதனசித்திரைமாதம் 22உயன்று(4-5-25) ஹரிசமயதிவாகரமென்னும் பெயராலேயே ஒரு அச்சியந்திரசாலை ஸ்தாபிக்கப்பட்டதென்னும் விஷயம் அன்பர்களுக்கெல்லாம் அகமகிழ்ச்சி உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. அதன்மூலமாகக்காலதாமதப்பட்ட பகுதிகளை இரண்டிரண்டாக ஒன்றுசேர்த்து விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணியிருக்கிறது. அன்றியும், அவ்யந்திரசாலையின் துணைகொண்டு வைஷ்ணவத் தமிழ் நூல்களையும், மற்றும் மணிப்ரவாள நடையிலமைந்த ஸம்ப்ரதாயக்ரந்தங்களையும் அச்சிட்டு லோகோபகாரமாக மிகவும் குறைந்த விலைக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்று கருதியுள்ளோம். அத்தகைய பெரும் முயற்சிகள் தகுந்த மூலதனமில்லாமல் நடைபெறா. ஆயினும் ஸ்ரீவைஷ்ணவர்களான செல்வர்களனைவரும் ஏற்றவாறு திரவியசகாயஞ்செய்ய முன்வருவார்களானால் எதுதான் நிறைவேறாது?

ஆகையால் பத்திரிகைக்கும், யந்திரசாலைக்குமாக மூலதனஞ் சேகரிக்க விரும்பிய காலையில், முதன்முதலாக ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை ஸ்வாமிசந்நிதியிலிருந்து ரூபா இருநூற்றைம்பதும், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி அயோத்தியா ராமாநுஜஸ்வாமி ஸந்நிதியிலிருந்து ரூபா இருபத்தைந்தும் திருவுள்ளமுவந்து பிரஸாதிக்கப்பெற்ற விவரம் மிகுந்த க்ருதஜ்ஞதையுடன் இங்குகுறிப்பிடத்தக்கதாகும். இவ்வுபகாரங்கள் ஸ்ரீவைஷ்ணவரெல்லோராலும் எக்காலத்திலும் மறக்கற்பாலனவல்ல.

ஸ்ரீமத்ராமாநுஜஸித்தாந்தப்ரவர்த்தகாசார்யர்களான, இந்த இரண்டு ஸ்வாமிகளுடைய பூரணமான கிருபைக்கு நமது திவாகரம் பாத்திரமாக ஆயிற்றெனின், மேன்மேலும் இதன் அபிவிர்த்திக்கு அதுவோர் அறிகுறியாகுமென்பது சொல்லவும் வேண்டுமோ? இவ்வாறே இன்னும் பலதனிகர்கள் இதனை ஆதரிக்க முன்

வருவார்களென நம்புகிறோம். இத்தகைய பெரிய காரியங்களில் தோன்றாத்துணையாய் நின்று உதவிபுரிகிற எல்லாம்வல்ல ஸர்வேசுவரன் இதனையுங்கடாக்ஷித்து அருள் புரிவானாக என்று அவனுடைய திருவடிகளையே எப்பொழுதும் வணங்கி வாழ்த்துவோமாக.

பத்திராதிபர்

ஹரிஸமயதிவாகர அச்சியந்திரசாலை ஸ்தாபிக்கப் பெற்றபொழுது
செந்தமிழ் உதவிப் பத்திராதியர் ஸ்ரீ. உப. வே.
T. K. இராமாநுஜையங்கார் ஸ்வாமி கூறிய
மங்கள வாழ்த்துப் பாடல்கள்.

திருமகள் கொழுந னருளி னுலகு
  தெளிதரப் பேரிரு ளகற்றி
வருமரி ஸமய திவாகர முரிய
  மதியினின் வெளிவரு மாறு
கருதியே கலியை யாயிரத் திருபத்
  தாறுசித் திரையினிற் கற்றோர்
திருவுள மகிழ விருபதோ டிரண்டாம்
  திகதியி னுத்தர நாளில்

மாடமார் கூடல் வளநக ரதனின்
  மாண்புற நிறுவுமிவ் வச்சுக்
கூடநா ளுளு மிசையொடு வளர்ந்து
  குவலய முழுவதுந் தெய்வப்
பாடலா னுரையா னுய்யுமா செய்த
  பருணித ரருளினு னல்வா
னீடொளி பரப்பி வாழி பல்லூழி
  நிலமிசை நிதிமிகப் படைத்தே

ஸ்ரீ:

ஸர்வேசுவரனது

சரணாகத ரக்ஷண விரதம்.

ஜகத்ரக்ஷகனான ஸர்வேசுவரனுடைய உத்தம குணங்களின் வர்ணனையில் வேதங்களும், சதுர்முகன்முதலானோருங்கூட அசக்தர் களென்றால் சிற்றறிவுள்ள மற்றையோருக்கு அது எவ்வளவு வரை யிலும் ஸாத்தியம், என்பது தானேவிளங்கும். என்றாலும் ஆளவந் தார் ஸ்தோத்திரத்தில் அப்பெரிய பக்தரே 'யத்வாச்ரமாவதி' என் கிற சுலோகத்தில் கூறியபடி, என்மனதுக்கு எட்டியவரையிலும், என்னால் முடிந்தவரையிலும் லஜ்ஜையைவிட்டு ஈசுவரனுடைய கல் யாண குணங்களை வர்ணிப்பதற்கு முன்வந்தேன்.

கருணாநிதியாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸ்வதஸ்ஸித்தமான, ரூப, ஔதார்ய, வாத்ஸல்யாதி குணங்களில் சரணாகதரக்ஷணம், என்னும் உத்தமகுணத்தை இங்கு விஸ்தரிக்கின்றேன். சாஸ்திரங் களின் முக்கியார்த்தமும் இதனையே பெரிதும் வெளியிடுகிறது என் பதில் ஆக்ஷேபிப்பாருமில்லையன்றோ?

சேதனர்கள் கரணகளேபராதிகளையும் மற்றும் பலசாதனங் களையும் பெற்றிருந்தும், நன்னெறியில் நடவாது, உழல்வதை நிவர்த் திக்கவும், துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்யவும் ஈசுவரன் செய்த அவதாரங்களில், ராமாவதாரத்திலேயே இந்த உத்தம குணம் பெரிதும் பிரகாசிப்பதால், அவ்வவதாரத்தில் காணும் ஆச்ரித ரக்ஷணங்களை உதாஹரிக்கின்றேன்.

முதலில் அந்த அவதாரத்திற்கு ஆஸ்பதமே சரணாகதர்களான தேவர்களின் ரக்ஷணார்த்தம் அபயமளித்ததாம். ஸ்ரீ ராமாயணமே சரணாகதிசாஸ்திரம் என்பதற்கு ஆசார்யர்கள் பலவித நிரூபணங் களைக் குறிப்பிடுகின்றனர். அவற்றுள் முதன்மையாக அவதாரத்தின் அடிப்படையே தேவர்களின் சரணாகதியாயிருப்பதுபற்றி, கிரந்த ஆரம்பத்திலேயே சரணாகதவாத்ஸல்யம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிறவித்துன்பத்தை நீக்குபவனும், பிறப்புமிறப்பு மில்லாதவனுமான ஸர்வேசுவரன் சரணாகத ரக்ஷணார்த்தம், பூமியில் மநுஷ்யயோநியில்

அவதரிக்க ஸங்கல்பித்தது அந்த குணத்திற்குப் பெரிய முதற் சான்றும்.

சரணாகத ரக்ஷணத்தில் புகுந்தவாறே, எவ்வளவோ சரணடைந்தவர்களின் ரக்ஷணம் ஏற்படுகிறது. அவாப்தஸமஸ்த காமனும் ஸர்வசக்திமானுமான அவனுக்கு எத்தனை சேதனர் சரணடைந்தாலும் ரக்ஷிப்பது அஸாத்யமோ?

சரணடைந்தவரில் நல்லோர், தீயர், என்னும் பேதம் பாராட்டுவது உண்டோ? அன்று சரணம், எனக் கூறியயாவரும் அவனுக்கு நல்லோரே.

கானில், மின்னிடைப் பிராட்டியின், மென்முலை வருத்திய கொடிய காகம் முடிவில் ரக்ஷிக்கப்படவில்லையோ? அக்காகாசுரன் மன்னிக்கத்தகுந்தவனா? அவனுடைய அபராதம் மறக்கற்பாலதோ? அவனுமன்றோ ரக்ஷிக்கப்பட்டான். அக்கொடியவன் முதலிலேயே பிழை பொறுக்கும்படி சரணமடையாது, மடமையினால் அசக்தர்பாலெல்லாம் அலைந்து இறுதியில் வந்தான் என்னும் தோஷம் அவனுடையதேயாகும். குற்றம் செய்த அப்பொழுதே சரணமடைந்தாலும் அவன் ரக்ஷிக்கப் படுவோனே. உலகீர்! இந்த உபாயத்தை அறிந்தவர்கள் அதனைக் கைக்கொள்ளாதிருப்பார்களோ.

வீரனான ஒரு சத்ருவை நிரஸனம் செய்து, அவனால் பீடிதனான ஒரு சரணாகதனை ரக்ஷிப்பதே ரக்ஷணத்தின் பெருமை. காகமோ பக்ஷிகளிலும் கீழ்மையானது. அதை ரக்ஷிப்பதில் கேவலம் கருணை காரணமாயிருந்தது. பலபராக்ரமத்தினால் சாதிக்கக் கூடிய அபயப்ரதானமே விசேஷம் என ஒரு சொல் பிறக்கத் தெரிய, சுக்ரீவனுரக்ஷணத்தை விளக்குகின்றனம்.

யுத்தத்தில் தனக்கு எதிர்ப்பட்டவனது பலத்தில் பாதியை ஆகர்ஷிப்பவனும், திரிலோகத்தையும் ஜயித்த ராவணனை ஒரு பூச்சியைப் போல இடுக்கி வந்தவனுமான வாலியினால் பீடிதனான சுக்ரீவனுக்கு, அபயமளித்து, வாலியைப் பாய்ந்து தனக்கு ஆற்றலுண்டென மராமரமேழெய்ததனால், விளங்கிக் காட்டி, வாலியையும் மடித்து

ராஜ்யாபிஷேகம் செய்வித்ததில் ஒருங்கே பலபராக்ரமாதி குண விசேஷங்களுடன், நாம் எடுத்துக்கொண்ட விஷயமும் ஸுப்ரஸித்தமேயன்றோ?

இனி, சரணாகதிபண்ணுமவர்களில், சத்ருவென்றும், நீசனென்றும், வித்யாஸம் பாராட்டுவதில்லையென்பதை சரணாகதனான விபீஷணாரக்ஷணத்தில் காட்டுவாம்.

ராக்ஷஸ வம்சத்திலேயே ஜனித்தவனும், 'மெய்வாட, மனம் வருந்த, மெல்லியளைக் கவர்ந்து சென்ற, செய்பாதகச் செறுக்குற்ற ராவணனது, ஸகோதரனுமான அவ்விபீஷணனை அபயமளித்து ரக்ஷித்தது வருணிக்கப் போமோ?

"நிவேதயதமாம் க்ஷிப்ரம் விபீஷ்ண முபஸ்திதம், ஸர்வலோக சரண்யாய ராகவாய மகாத்மனே" 'எல்லோருக்கும் சரண்யனும்' ரக்ஷிக்க வல்லவனுமான ராகவனிடத்தில் விபீஷணனெனும் நான் சரணமாக வந்திருப்பதாய்ச் சீக்கிரம் தெரிவியுங்கள் என, சுக்ரீவன் முதலானோரிடம் கூற., அச்சுக்ரீவன் முதலானோர் அப்படியே ராகவனிடத்திற் சென்று, சத்ருமத்தியினின்றும் வருபவனும், காமரூபியான ராக்ஷஸனும், ஆன இவன் நம்பத்தகாதவன், ராவணனால னுப்பப்பட்ட சாரன். இவன் வஞ்சிப்பதில் சூரன். ஆதலால் இவனைத் தண்டிப்பதே உசிதம் எனவும், "உலூகாநிவ வாயஸ:" என இவன் ஒருவனுயிருந்து நம்மெல்லோரையும் நாசம் செய்து விடுவான். இவனைத் துரத்திவிட்டாலும் மாரீசனைப் போன்று பின்னொருகால் வந்து பீடிப்பான். ஆதலால் இவனது மந்திரிகளது தலைகளையறுத்து இவன் கையில் கொடுத்து இவனையுங் கொல்ல வேண்டுமெனவும் கூறினர். இதனை மறுத்து ராகவன் பல உதாரணங்களால் அவன் ஏன் நிர்தோஷியாக இருக்கக்கூடாதெனச் சொல்லியும் பின்னும் பிரமுகர்களான ஒவ்வொருவரும் அவனை அங்கீகரிப்பதில் ஆக்ஷேபித்தனர்.

இதனைச் செவியேற்ற ஸ்ரீ ராகவன் "மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன" தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா

மேத தகர்ஹிதம்" சரணமென்று வந்தவனை எவ்வளவு துஷ்டனாலும் நான் கைவிடமாட்டேன். அதுநல்லோரால் புகழத்தக்கதே' எனக்கூறி விபீஷணன், நல்ல எண்ணத்துடனும், தன்னைக் காத்துக் கொள்வதற்குமாகவே ஏன் வந்திருக்கக் கூடாது. அவனது தொனியில் பயமானது பெரிதும் விளங்குகிறது. பயந்தாவது அல்லது பாவனை செய்தாவது சரணம்! எனக்கூறிவந்தவனை ரக்ஷிக்காதவன் பௌருஷமும், ஆற்றலுமில்லாதவன், எனவும், இன்னும் கபோத உபாக்யானத்தையும் கூறி விபீஷணனைத் தான் ரக்ஷித்தேதீருவதாய் பிரதிக்ஞையும் செய்கிறார். அவ்வாறே அவனுக்குத்தான் அபயமளித்தாய் விட்டதால், அவன் விபீஷணனல்லாது ராவணனாயிருப்பினும், அழைத்துவாவென சுக்ரீவனை ஆக்ஞாபித்தார். சத்ருவெனக் கூறிய சுக்ரீவனையே அவ்விபீஷணனைபிட்டுவாவென ஆக்ஞாபித்ததில் ஒருபாகவத நிந்தனையில் அவனுக்கு வந்தபாபந்தொலைய அவனைக்கொண்டே விபீஷணனை அழைக்கச் சொன்னதாய் வித்வத் ஜனங்கள் ஒரு சுவாரஸ்யம் சொல்வதுண்டு. எனவே இதனால் ஸ்ரீராகவன் பூர்வம் தன்னைச்சரணடைந்த சுக்ரீவனுக்குப்பின்னர் எக்காலத்திலும் பாபம் சம்பவியாதிருக்கும்படி பாது காத்தருளினானென்பதும் விசதமாகிறது.

நிற்க, ராவணனே வந்திருப்பினும் என மொழிவதிலிருந்து ஸ்ரீ ராகவன் கொடிய அபராதியான ராவணனை வதம் செய்யாது, அவன் சரணமென்றுவர, அவனையும் க்ஷமிக்க ஆசை கொண்டே ஸமுத்திரத்தில் தாமஸித்தார். என்னும் உட்பொருள் த்வநிப்பதை ஆக்ஷேபிப்பாரில்லையென நினைக்கிறேன். இவ்வாறெல்லாம் சரணாகதிபண்ணியவர்கள் ரக்ஷிக்கப்பட்டபின்னர் ராகவன் ராவணனுடன் போர்புரியுங்காலும், ரத சாரதிகளழிந்து வெறுங்கையனாய் நிற்கும் அவனை 'இன்றுபோய், நாளைப் போருக்கு வா' என சரணாகதனாவனோவெனக் காமிகள் தையலார் மனமிரங்குமோவென வேண்டுவது போல் அவன் மனந்திருந்தலாகாதாவெனக் கூறினார். சரணாகதி பண்ணாதது துர்ப்புத்திபடைத்தராவணனது தோஷமெனவும் சரணாகதி பண்ணியவர்கள் க்ஷேமமடைந்ததும் உள்ளங்கை நெல்லிக்கனி. இப்படிக்கெல்லாம் 'சரணாகத ரக்ஷணமென்பது' ஈசுவரனது

முக்ய விரதமாயிருப்பதாலும், அந்த உபாயத்தைக் கைப்பற்றியவ விலே கர்மபந்தங்களும் நிவ்ருத்தியாகி, சேதனன் உஜ்ஜீவிக்கிரு னென்பது நமது பரமாசார்யர்களின் திடமான ஸித்தாந்தமாத லாலும் அதனை இங்கு விஸ்தரிக்கலானேன்.

இன்னும் கிருஷ்ணவதாரத்தில் த்ரௌபதிக்கு அபயப்ரதானம் பண்ணிபவிடத்திலும், இதன் மாஹாத்மியம் மிகவும் வெளியாகிறது. ப்ரபத்திக்குக் காலதேச நியமமில்லையென அசுத்தையான நிலை யிலும் ப்ரபத்திபண்ணிய த்ரௌபதியினிடத்திலும், வ்யக்தி நிர்ணய மில்லையென முதலைவாய்ப்பட்ட கஜேந்திரனிடத்திலும் காணலாம். ஆதலால் நம்மெல்லோருக்கும் ஆசார்யர்களான முன்னோர்களில் பரம பக்தரான ஸ்ரீ ஆளவந்தார் அருளியபடி "நதர்ம நிஷ்டோஸ்மி நசாத்ம வேதீ நபக்திமான் த்வத் சரணாரவிந்தே, அகிஞ்சநோ நங்யகதிச் சரண் ய த்வத் பாதமூலம் சரணம் ப்ரபத்யே" என்று சர்வேசுவரனைச் சரணமடைகிறவர்கள் நிஸ்ஸந்தேகமாய் அவனது க்ருபைக்கிலக் காவார் என்பது நிச்சயம்.

ஓர் ஸ்ரீ வைஷ்ணவன்.

ஸ்ரீ:

சென்னை,

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 14-வது வார்ஷிக ஸங்கத்தின்,

அக்ராஸநர் முடிவுரை

[முதல் தொகுதி 303-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீலக்ஷ்மீ நாராயணனுடைய க்ருபையினால் இந்தசபை இம் மதுரையில் மதுரமாக நடந்து முடிந்தது. இது நம்முடையவும் மதுராவாஸிகளுடையவுமான அத்ருஷ்டபலமாயிருக்கிறது. இவ் வளவு சிறப்பாக நடக்கும்படி இந்த ஸங்கத்தில் யாவரும் மிகுந்த குதூ ஹலத்துடன் கூடினார்கள். இவர்களுக்கு நாம் நன்றியறிவுடையவர் களாயிருக்கிறோம். இம்மூன்று தினங்களிலும் உபந்யாஸகர்கள் அம்

ருததாரையாகப் பிரசங்கமழை பொழிந்தார்கள். பதினாறு உபந்ய ஸங்களும் பதினாறு ரஸமாயிருந்தன. இப்படிப்பட்ட சிறப்பும் ருது ஹலமும் நம்முடைய ஸபை அபிவிருத்தியடையுமென்பதைக் காட்டு கின்றன. இந்த ஸபையானது மேன்மேற் பல இடங்களிலும் நடந் தேறினால் நம்முடைய சித்தாந்தம் எங்கும் பரவி நிலைநிற்குமென்பது நிச்சயம்.

ராஜாங்கத்தார் ஆங்கில பாஷையிலும் லௌகிக பதவிகளிலும் ப்ரஸித்தி பெற்றவர்களுக்குத் தகுந்த பட்டமளிக்கிறார்கள். அவை பல படியாயிருக்கின்றனவென்பதை நாமெல்லோரும் அறிவோம். ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த சாஸ்திரங்களில் நன்குபயின்ற சிறந்த பண் டிதர்கள் பலர் இருக்கிறார்கள். இதுவரையில் நாம் அவர்களை வெகு மானித்து அவர்கள்பாண்டித்யத்துக்கேற்குமாறு ஒரு பட்டமும் அளித்தோமில்லை. நம்முடைய ஸித்தாந்த விஷயத்துக்கென்று தனியே சில பட்டங்களை இந்த ஸபையார் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்பது அடியேன் அபிப்பிராயம்.

இந்தப்பட்டங்கள் இரண்டுவகைப் பட்டனவாயிருக்கவேண்டும். அவற்றுள், இயல்பாகவே சிறந்தபண்டிதர்களாய், சித்தாந்தத்திற்குப் பலபடியாலும் உபகாரம் செய்திருக்கும் ஸ்வாமிகளின் பூஜ்யதையைத் தெரிவிப்பதற்காக அக்ரதாம்பூலம்போல ஒரு பட்டம் ஸமர்ப்பிக்க வேண்டுமென்பது ஒருவகை. ஒவ்வொரு வருஷமும் நம்முடைய ஸம்ப்ரதாயத்துக்கு விசேஷ உபகாரம் செய்தவர்களுக்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென்பது மற்றொருவகை. இது அவர்களால் செய்யப்ப டும் உபகாரத்துக்குத் தக்கபடி இரண்டு மூன்று பிரிவுகளையுடையதா யிருக்கலாம். அவற்றுள் நம்முடைய சித்தாந்த ஸபையின் நோக்கங் களைப் பின்பற்றி மிகுதியாக உழைப்பவர்களுக்கு ஒரு பட்டம் அளிக்கவேண்டும். நம்முடைய ஸித்தாந்திகளுக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பகையை நீக்குவதற்காக உழைப்பவர்களுக்கு ஒரு பட்டம் அளிக்கவேண்டும்.

இதுமுதல் பகவத்ராமாநுஜஸித்தாந்தத்தைச்சேர்ந்த ஒவ்வொ ருவரும் அந்த ஆசார்யனிடத்தில் மிகுந்த அன்புடையவர்களாய்

மாறுபாட்டை விட்டொழித்து ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் செய்கிறதில்லையென்று ஸங்கற்பம்செய்துகொள்ளவேண்டும். அடியேனுடைய முன்னுரையில் இதை விரிவாகச் சொல்லவில்லை. நமக்குள் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சண்டை எப்படியுண்டானது என்பதை ஆராய்வோம்.

முதலில் உண்டாயிருக்கும் பெரிய சண்டை ஆசார்யஸ்துதியைப் பற்றியதே. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய ஆசார்யன் விஷயமான தனியன்களை அநுஸந்திக்கிறோமென்றால் அதற்குத் தடை செய்வது நியாயமாகுமா? நம்கொள்கைப்படி ஆசார்யனை ஸ்துதிப்பதே சிஷ்யனுடைய முதன்மையான காரியம். அதுசெய்யாமலிருப்பவனைச் செய்யும்படி வலிந்து தூண்டவேண்டுவதன்றோ நமது கடமை. அதைச்செய்யும் ஒருவனைத் தடுப்பது வைஷ்ணவ லக்ஷணமாகுமா? அப்படித் தடுக்க நினைப்பவர்களும், தடுப்பவர்களும் ஸ்ரீவைஷ்ணவரல்லரென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இரண்டாவது சண்டை தீர்த்தமர்யாதை விஷயமாயுள்ளது. பகவானைப்போலப் பாகவதர்களும் நமக்கு மேலானவர்களே. பாகவதர்கள் தீர்த்தம் பெற்றுக்கொண்டபின்பு அவர்களுடைய பிரஸாதமாய்க் கடைசியில் நாம் தீர்த்தம் பெற்றுக்கொள்ளுவது நம்முடைய ஸ்வரூபத்துக்கு மிகவும் பொருத்தமானது. இப்படிச் செய்தாலன்றோ நமக்குள்ள சாந்தி, க்ஷமை முதலிய குணங்கள் வெளியாகும். இவ்விஷயத்திற் சண்டையிடுவது மனதுக்குத் துன்பத்தையும் அவமானத்தையும் விளைவிக்கிறது. இதை ஒழிக்கவேண்டியதும் நம்முடைய கடமைகளில் முதன்மையானதே. இதற்காகவே இப்படிப்பட்ட சண்டையை முயன்று தீர்த்துவைப்பவருக்கு ஒரு பட்டம் அளிக்கவேண்டுமென்று முன் தெரிவித்துக் கொண்டேன். இந்த ஸபையார் நன்கு யோசித்துப் பொருத்தமான பெயர்களை ஏற்படுத்தி அடுத்த வருஷம் முதல் பட்டங்கள் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்த ஸபைக்கு எழுந்தருளியிருந்து உபந்யாஸங்கள் செய்தருளிய பண்டிதர்களுக்கு ஸபையோர் உபகரித்திருப்ப[illegible] போதாதென்று என் நண்பர் ராமையங்கார் தெரிவித்துக்[illegible]

பண்டிதோத்தமர்கள் கைம்மாறு கருதாது எழுந்தருளினமையாலே இந்த ஸபை ஜனகராஜஸபைபோல் விளங்கிற்று. நாம் லக்ஷரூபா கொடுக்கிறோமென்றாலும் அதற்காக ஆசைப்பட்டுக்கொண்டு வரத் தக்கவரல்லர் இந்த மஹான்கள். கேவலம் க்ருபாவச்யர்களாயன்றோ எழுந்தருளியிருப்பது. அசலூர்களிலிருந்து எழுந்தருளி இந்த ஸபையை அழகு பெறச்செய்தது அவர்களது ஆர்வமுடைமையே.

மஹாமஹோபாத்தியாயர் என்ற பட்டத்தைப்பெற்றவராயும், அபரதேசிகன் என்று சொல்லக்கூடியவராயும், அந்தத் தேசிகனைப் போலே சிறுத்த திருமேனியுடையவராயும், தேசிகாசார்யர் என்ற திருநாமத்தையுடையவராயும் உள்ள இந்தப்பெரியார் "வ்யாஸஸித்தாந்தமார்த்தாண்டம்" என்னும் ஓர் அரியநூலை இயற்றியிருக்கிறார்: அது பிரும்மசூத்திரத்திற்கு ஒரு பாஷ்யம் போல்வது. இந்த ஸ்வாமி தம்முடைய உபந்யாஸத்தில் நம் ஸித்தாந்தத்தை நிலைநிறுத்துவதற்காகப் பலமுறை தாம் வடதேசம் சென்று வாதிகளை வென்று நிலைநாட்டிய படியை எடுத்துக் காட்டினர். இப்படியே நம் பூர்வாசார்யர்களும் ஸித்தாந்தத்தைக் காப்பாற்றிவந்திருக்கிறார்கள். தற்காலம் ஸம்ப்ரதாயத்தில் நமக்கு ஈடுபாடில்லாமையால் இதன் அருமையை நாம் அறிந்துகொள்ளவில்லை. ஆயினும், இனிப் பின்னால் வருமவர்கள் ஸம்ப்ரதாயத்தை நிலைநிறுத்துவதற்கு இப்படியான நூல் மிகவும் பயன்படத்தக்கது. இந்தஸ்வாமி தர்மசாஸ்தராப்யாஸம் செய்யத் தொடங்கிய காலமுதல் நாளிதுவரையில் இந்தஸம்ப்ரதாய சாஸ்திரங்களைப் பயின்றிருப்பதையும் ஆராய்ந்திருப்பதையும் ஒருங்கு திரட்டி இந்தப்புஸ்தகமாக எழுதியிருக்கிறார். ஸ்ரீ உப. வே, அன்பில் கோபாலாசார்யர் முதலியவர்கள் இதைஸேவித்து அச்சிட்டுவெளியிட வேண்டுமென்று அபிப்பிராயப்பட இந்த ஸ்வாமியும் அங்கீகரித்திருக்கிறார். இதை அச்சிட்டுவெளியிட உத்தேசம் அறுநூறுரூபா செல்லுமென்று தோன்றுகிறது. நாம் எல்லோரும் இயன்றவளவு உபகரிப்போமானால் இந்நூல் எளிதில் வெளிவரக்கூடும். ஒவ்வொருவர் ஒவ்வொரு பிரதிவாங்கிக் கொள்வதாக வாக்களித்தால் இன்னும் சுலபமாம். நம்ஸம்ப்ரதாயத்தில் மிகுந்த ஈடுபாடுடையவரும் பெரிய வைதிகருமான திவான்பஹதூர் நம்பெருமாள் செட்டியார் இப்புஸ்தகம் அச்சிடுவதற்கு ரூபா இருநூறு முன்னதாகவே கொடுத்திருச்

கிறார். அது பாங்கியில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவருடைய தூண்டுதலுமில்லாமல் தாமே முன்வந்து கொடுத்தமையால் இவருடைய ஆஸ்திக்யம் நன்கு புலப்படுகிறது. இந்த மஹத்தான க்ரந்தம் ஸ்ரீஉப. வ. வி. கோபாலாசார்யரால் ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற ஸபையில் ரங்கநாதன் ஸந்நிதியில் அரங்கேற்றப் பட்டிருக்கிறது. இந்த க்ரந்தப்ரசாரண விஷயத்தில் எல்லோரும் முன்வந்து உதவி புரியவேண்டும்.

கடைசியில் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். ஸ்ரீரங்கத்திற் பெரிய பெருமாளையும், திருநகரியில் ஆழ்வாரையும் ஸேவித்து அநுஜ்ஞை பெற்றுக்கொண்டு இந்த ஸபைக்கு வந்தேன். பெரியபெருமாளை ஸேவிக்கும்போது அவருடைய திருவடிகளில் நிரந்தரமாய் அந்தரங்கமாக வீணாகானம் செய்து கொண்டுவரும் வைணிக வித்வான் ராமஸ்வாமிஐயங்கார், பகவானுக்கு முகோல்லாஸமாக திவ்ய ப்ரபந்தத்தை வீணையிற் பாடுவதைக்கேட்டு ஆநந்தித்தேன். அப்படிப்பட்ட கானத்தை இச்சபையோரெல்லோருங் கேட்டனுபவிக்க வேண்டுமென்றெண்ணி அவரை, இங்கு வரவழைக்க, ஸபையின் சென்ற இரண்டு தினங்களிலும் ராத்திரி அறு-மணி முதல் ஒன்பது-மணி வரை எல்லோரும் அந்த வீணாகானரஸத்தை அநுபவித்தார்கள். அந்தந்தக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களை அந்தந்தக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவசியம் ஆதரிக்கவேண்டும். இவரை எப்படி ஆதரிக்க வேண்டும்? இவரை எப்படி ஆதரிக்கலாம்? என்று யோசித்துப் பட்டணத்திலிருந்து ஒரு தங்கப்பதக்கம் வரவழைத்து வைத்திருக்கிறேன். அதில் இவருக்கு இந்த ஸபையோரால் பரிசளிக்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இதை அவருக்குப் பாரிதோஷிகமாகக் கொடுப்பதற்கு நீங்கள் அநுமதிதரவேண்டும். கீழ்ச் சொல்லிய மற்றப் பட்டங்கள் கொடுப்பது ஒருபக்கமிருக்கட்டும். இரண்டுநாளாக நம்முடைய செவிகளுக்கு ஆராவமுதளித்த இவருக்கு "ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபையின் வைணிகவித்வான்" என்கிற பட்டம் இப்பொழுது கொடுக்கப்படுகிறது. இவர் இந்த ஸபை எங்கு நடந்தபோதிலும் தவறாமல் அங்குச் சென்றிருந்து சிறப்பிப்பாரென்று நம்புகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்

சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.

[முதல் தொகுதி 289-ம் பக்கத்தொடர்ச்சி]

அது நிற்க, பூர்வமீமாம்ஸையில், "அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா" என்கிற ஸூத்ரத்தில், சொல்லப்பட்ட தர்மபதம் "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்கிறபடியே ப்ருஹ்மபரமாகையாலும், பூர்வமீமாம்ஸையும் உத்தரமீமாம்ஸையும் ஏகசாஸ்த்ரமாகையாலும், உத்தரமீமாம்ஸையில் ஏற்படும் ப்ருஹ்மவிசாரத்துக்கும் ஸாதாரணப்ரதிஜ்ஞார்பரமென்று சுருதப்ரகாசிகையில் நிரூபித்திருக்கிறபடியால், அந்த தர்ம சப்தார்த்தமான உபாயம் ஸர்வேச்வரன் என்று ஸித்திக்கிறது.

ஆனால் சுருதப்ரகாசிகையில், த்ரவ்யதேசங்கள் பலகாரணமன்றியிருந்தாலும் உபகாரணமாயும், அதிகாரணமாயுமிருப்பதால் தர்மசப்தார்த்தமாவனபோல ஈசுவரனும் பலப்ரதனாகையாலே தர்மசப்தார்த்தமாகலாமென்று நிரூபித்திருப்பதால் பலகாரணத்வம்ஸித்திக்கமாட்டாதென்னில், கீழ்நிரூபித்தபடி காரணத்வம் ஸித்தித்திருப்பதால் அந்த காரணத்வத்தோடேகூட பலப்ரதத்வனாகையால் ஏற்படுகிற தர்மத்வமும் உண்டென்று ஸித்திப்பதல்லது, காரணத்வ நிஷேதத்தில் தாத்பரியம்கொள்ள இடமில்லை. இப்படிச் சொல்லாதபக்ஷத்தில் மற்ற இடங்களில் காரணத்வத்தை உபபாதிக்கிறவாக்கியத்தோடு விரோதிக்கும்.

மேலும் திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில், "இல்லற மில்லேல் துறவறமில்" என்கிற பாசுரத்தில், ப்ரவ்ருத்தி தர்மமன்றாகில் நிவ்ருத்திதர்மமாகச் சொல்லப்படுவதும் தர்மமில்லை; நல்லறமாவதும், நாலு வேதங்களாலும் சொல்லப்படுகிற தபஸ்ஸும் நாராயணனேயாம். இம்முடிவை அன்றென்று மறுப்பவர் ஒருவருமில்லை; ப்ராமாணிகரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது; என்று அறுதியிட்டிருப்பதாலும் பலகாரணத்வரூபமான உபாயத்வம் ஈசுவரனுக்கேயுள்ளதென்பது ஸித்தம்.

இங்ஙனமன்றிக்கே, உபாயமென்பது அநிஷ்டநிவ்ருத்திக்கும், இஷ்டப்ராப்திக்கும் காரணமாயிருப்பதைச் சொல்லுமதாகையால், அநிஷ்டநிவ்ருத்திக்குக்காரணம் பக்தியாதிகள்; இஷ்டப்ராப்திக்குக் காரணம் ஸர்வேசுவரன், ஆதலால் பக்தியாதிகள் காரணமென்பதற்கும், ஈசுவரன் காரணமென்பதற்கும் விரோதமில்லை. ஆனால் ஸ்ரீ பாஷ்யத்தில் "அவித்யா நிவ்ருத்திரேவ மோக்ஷ:" என்றும், இஷ்டப்ராப்தியென்பது "பாவாந்தர மபாவ:" என்கிறந்யாயத்தாலே அவித்யா நிவ்ருத்தியேயாகையால் தனித்து இஷ்டப்ராப்தியென்பது இல்லை என்றிருப்பதால் இந்த வ்யவஸ்தை கூடாதென்னில், அப்படியிருந்தாலும் அவித்யாநிவ்ருத்திக்கு அநந்தரபாவியாய்வருகிற அநுபவம் "பாவாந்தர மபாவ:" என்கிறந்யாயத்தாலே அவித்யாநிவ்ருத்தியாகச் சொன்னாலும் அதற்கு அனந்தரம் வருகிற அனுபவகைங்கர்யங்கள் அவித்யாநிவ்ருத்தியாகாமையாலும், அவைகள் ஸ்வாபாவிகங்களாயிருந்தபோதிலும், "இச்சாத ஏவ தவவிச்வ பதார்த்த ஸத்தா" என்கிறபடியே ஸர்வேசுவரனுடைய இச்சையாலே ஸித்தங்களாகையால் ஸர்வேசுவரன் காரணமென்று சொல்லலாமென்னில், அநிஷ்டநிவ்ருத்திபோல் ஆகந்துகமன்றியே ஸ்வாபாவிகங்களாகையால் ஸர்வேசுவரனுக்கு ஸத்தையை நிர்வஹிக்கையாகிற ப்ரயோஜகத்வமொழிய காரணத்வம் ஏற்படாது.

அப்படி காரணமாகச்சொன்னாலும் கீழ் உதாஹரிக்கப்பட்ட ப்ரமாணங்களில் சரணசப்தம்: "ச்ரு ஹிம்ஸாயாம்" என்கிற தாது பாடத்தின்படி அநிஷ்டநிவ்ருத்தியிலும் காரணமென்று ஏற்படுமாகையால் அப்படிச்சொல்வது ப்ரமாணவிருத்தம்.

ஆனால் ஸாராஸ்வாதிநியில் இப்படி நிரூபிக்கப்படுகிறது. இவைகளில் ஏற்படுகிற ஸ்வாரஸ்யாஸ்வாரஸ்யத்தை ப்ராஜ்ஞர்கள் நிரூபித்துக்கொள்க.

உபேயமாகையாவது:— ஸர்வேசுவரனே ப்ராப்யுத்தேசியனாயும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாயுமிருக்கை; ப்ராப்யுத்தேசியத்வம் ஸர்வேசுவரமாத்ரநிஷ்டம். கைங்கர்யப்ரதி ஸம்பந்தித்வம் ஸர்வேசுவரனிடத்திலும் பிராட்டியிடத்திலும் பர்யாப்தம். இந்த விஷயம் கீழே நிரூபிக்கப்பட்டது.

இப்படியிருந்துள்ள ஸர்வேசுவரன் பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரங்கள் என்கிற ஐந்துப்ரகாரங்களை யுடையவனுயிருப்பன்.

அவற்றுள், பரனுயிருக்கையாவது-அப்ராகிருதமான நித்யவிபூதியில் சுத்தஸத்வமயமான விக்ரஹத்தையுடையவனுயும், ஷாட்குண்ய பரிபூர்ணனுயும், லக்ஷ்மீ பூமீ நீளாதி மஹிஷீஜனஸமேதனுயும், அநந்த கெருடவிஷ்வக்ஸேநாதி நித்யர்களாலும் முக்தர்களாலும் பரிசரிதசரணயுகளனுயும், அனந்தபோக பர்யங்கத்தில் எழுந்தருளியிருக்குமிருப்பு.

வ்யூஹமாவது:-அந்த விக்ரஹத்தில் நின்றும் உத்பந்நங்களான வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபங்களையுடையவனுய்க்கொண்டு ஆமோதாதிலோகங்களிலும், க்ஷீராப்தியிலும், எழுந்தருளியிருக்குமிருப்பு. இவற்றுள் வ்யூஹ வாஸுதேவ ஸ்வரூபர் ஷாட்குண்ய பரிபூர்ணராயிருப்பர். மற்றமூவர்களிடத்திலும் இரண்டிரண்டு குணங்களே ப்ரகாசிக்கும்.

விபவமாவது:-வ்யூஹத்தில் அநிருத்தனிடத்தில் நின்றும் உண்டான ராம கிருஷ்ணுதி ரூபங்களையுடையனுயிருக்குமிருப்பு. இவைகள் பூர்ணுவதாரமென்றும், ஆவேசாவதாரமென்றும் இரண்டுவகையாயிருக்கும். அவற்றுள், பூர்ணுவதாரமாவது:-அவதாரவிக்ரஹங்களில் ஜீவத்வாரா அதிஷ்டாதாவாயிருக்கையன்றிக்கே தானே அதிஷ்டாதாவாயிருக்கை. ஆவேசாவதாரமாவது:-விக்ரஹத்துக்கு அதிஷ்டாதாவான ஜீவனிடத்தில் விக்ரஹவிசிஷ்ட ஸ்வரூபத்தாலும் கேவலசக்தியாலும் ஆவேசித்துக்கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு. பூர்ணுவதாரம் ராம கிருஷ்ணுத்யவதாரங்கள். ஆவேசாவதாரங்கள் பரசுராம, பலராமாத்பவதாரங்கள். சக்தியாவேசரூபங்கள் ப்ருஹ்ம ருத்ராதிகள் வ்யாஸார்ஜுநாதிகள். இவைகளில் பூர்ணுவதாரமான ராமகிருஷ்ணுதி விக்ரஹங்கள் அப்ராகிருதங்கள்.

அந்தர்யாமியாயிருக்கையாவது:— ஸமஸ்தசேதனர்களுடைய ஸ்வரூபங்களிலும், அசேதனங்களிலும் சேதனத்வாராவும், ஸாக்ஷாத்தாகவும் பிரத்தியேகம் பரிஸமாப்யவர்த்தியா யெழுந்தருளியிருக்கு

மிருப்பு. இது எதுபோலென்னில் ஜாதி பதார்த்தம் ஒன்றாகவேயிருந்தாலும் வ்யக்திகள் தோறும் பிரத்யேகம் பரிஸமாப்யவர்த்தியாயிருக்குமாப்போலே யென்க. இந்த விஷயம் "சுருதேஸ்து சப்த மூலத்வாத்" என்கிற ஸூத்ரவ்யாக்யாநாவஸரத்தில் வேதாந்ததீபத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரால் ஸ்பஷ்டமாயருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தர்யாம்யதிகரண சுருதப்ரகாசிகையில் "ய:ப்ருதிவ்யாம் திஷ்டந் யஆத்மநிதிஷ்டந்" என்று ப்ருதிபர்யாயம் யத்சப்தத்தைப்பிரயோகித்திருப்பது பகவத் ஸ்வரூபம் வஸ்துக்கள் தோறும் பூர்ணமாயிருக்கு மென்பதை ஜ்ஞாபிக்கைக்காகஎன்றும், இப்படியேவேதார்த்த ஸங்க்ருஹசுருதப்ரகாசிகையிலும் சொல்லப்பட்ட தென்றும் அறியலாம். ந்யாயஸித்தாஞ்ஜனத்தில், அத்ரவ்ய பரிச்சேதத்தில் ஜ்ஞானம் நிரவயவத்ரவ்யமாகையால் ப்ரத்யேகம் த்ரவ்யங்களில் பூர்ணமாக ஸம்பந்தித்திருக்குமென்றும், இப்படியே ஈசுவரஸ்வரூபமும் வஸ்துக்கள் தோறும் ஜாதிபோல் பூர்ணமாக வர்த்திக்கு மென்றும், இபபடியே பாஷ்யகாரர் வேதாந்ததீபத்தில் அருளிச்செய்திருக்கிறார் என்றும் தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். அன்றியும் க்ருதஸ்நப்ரஸக்த அதிகரண சுருதப்ரகாசிகையிலும், "சரீரம்சஸ்ய ப்ரதிவஸ்து பரிஸமாப்ய வர்த்தித்வாத்" என்றே நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க ரஹஸ்யத்ரயஸாரத்தில் "ஈசுவர ஸ்வரூபம் வஸ்துக்கள் தோறும் பூர்ணமாக வர்த்திக்குமென்றால் பேதாபேத வாதம் போல் விருத்தஸமுச்சயமேற்படும். ஆகையால் அது அநுபபந்நம்" என்று தேசிகன் அருளிச்செய்திருப்பது அங்வாருஹ்யவாதமாகக் கொள்ளத்தக்கது. சாஸ்த்ரத்தாலேயே அறிய வேண்டிய அர்த்தங்களில் யுக்தி விரோதம் கூடாதென்பது "சுருதேஸ்து சப்த மூலத்வாத்" என்கிற ஸூத்ரத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும் பலவிடங்களிலும் காணலாம். இப்படியே நிரவயவத்ரவ்யங்களில் அந்த:ப்ரதேசமில்லாமையால் அந்தர்வ்யாப்தியில்லை யென்றும், விபுத்ரவ்யங்களில் பஹி:ப்ரதேசமில்லாமையால் பஹிர்வ்யாப்தி கூடாதென்றும் சொல்லுவது "அந்தர் பஹி:ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:" "யஆத்மநி திஷ்டன் யஆத்மநோ அந்தர:" என்கிற சுருதி வாக்யங்களால் ப்ரமாண விருத்தமாம். ப்ரமாண பலத்தால் ஈசுவரவ்யாப

நத்துக்கு யோக்யமான அந்த: ப்ரதேசமும் பெஹி:ப்ரதேசமும் உண்டென்றே கொள்ள வேணும். இந்த விஷயத்தை சுருதப்ரகாசிகையில் "யஆத்மநிதிஷ்டந்" என்கிறவித்தால் வேத்யாம் அக்நிஸ்திஷ்டதி என்னு மாப்போலே பெஹிர்வ்யாப்தியைச் சொல்லுகிறதென்றும் "ஆத்மநோந்தர:" என்கிற வித்தால் திலேதைலம் திஷ்டதி என்னுமாப்போலே அந்தர்வ்யாப்தியைச் சொல்லுகிறதென்றும், அருளிச்செய்திருக்கிறார். இங்ஙனமன்றிக்கே "அங்குஷ்டமாத்ர: புருஷ:" என்கிற சுருதியின்படி உபாஸகாநுக்கிரஹார்த்தமாக ஹ்ருதயகமலத்தில் விக்ரஹவிசிஷ்டனாக இருக்குமிருப்பும் அந்தர்யாம்ய வஸ்தையில் ப்ரகாரபேதமாயிருக்கும். இந்த விஷயம், "ஹ்ருத்யபேக்ஷயாது மநுஷ்யாதி காரத்வாத்" என்கிற ஸூத்ரத்திலும், "நிறைந்தவன்பழி" "வெள்ளைச்சுரிசங்கொடு ஆழியேந்தி" என்கிற பாசுரங்களுடைய வ்யாக்யானங்களிலும் கண்டு கொள்வது.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமை.

வாணீ ச்ரேணீ யதீயா நிகில குமதி ஹ்ருத்ரூட மூலாதி காட
த்வாம்தம் வித்வம் ஸயந்தீ புதஜன ஹ்ருதயா மோத மாபாதயந்தீ
ப்ராசீ நாசார்ய வாசா மதிகஹந மஹாஸார ஸர்வஸ்வதாத்ரி
ஸர்வோத் கர்ஷேண லோகே ஜயதி நரஹரிர் தேசிகேந்திரோ கதிர்மே

அனந்தஸைல நிலயம் அனந்தார்ய குரோ: ப்ரியம்
அநந்த குணரத்னாப்திம் அநந்தம் பாவயே ஹ்ருதி,

'ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தம் அநாதி, என்ற விஷயத்தில் அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டினவரை முந்தியே சிலவிண்ணப்பிக்க நேர்ந்தன. இனி அந்த ஸித்தாந்தத்தில் ஊற்றங்கொண்ட பெரி

யோர்களின் பெருமையை ஒருவாறு எடுத்துரைக்கலாமென்ற கருத்துடையேன், ஆனால், அது அறிவுடையார்க்கும், அவனுக்குமே எட்டாத விஷயம். ஆகிலும் பூனையின் குட்டி பாற்கடலருகே செல்லுமாகில் தன்னுடைய ஆசை தீருகைக்கு அதைச் சிறிதேனும் அருந்தியல்லது நில்லாதவாறே அடியேனும் பிரவர்த்திக்கிறேன். ‘ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி’ என்பதை நிரூபித்தபோது விஷ்ணுஸம்பந்த முடையாரே வைஷ்ணவர்களென்றும், அந்த ஸம்பந்தம் அகல்ஞாலத்துள்ளார் அனைவர்க்குமே உள்ளதாகையால் யாவரும் வைஷ்ணவர்களென்றும், அறியாது ஒழுகும் முறையால் அல்லாதாரென்னும் வ்யவஹாரம் ஏற்பட்டதென்றும் நிரூபிக்கப் பட்டன.

இனி விஷ்ணுஸம்பந்தம் பெற்றுடையோர் என்கிற அறிவே வைஷ்ணவர்கள் என்கைக்குக் காரணமாகக் காட்டியபடியால் அந்த அறிவினுடைய அவஸ்தா விசேஷத்தால் அஃதாவது அறிவு உரு மாறுந் தன்மையால் இவன் பத்துவிதமான தன்மை அடைகிற படியையும், பின் அது பிரேம ரூபமாகும்போது (ஸ்நேஹரூபமாகும் போது)உண்டாகும் இரண்டுவிதமான நிலைகளையும் எடுத்து விளக்கிப் பின் எம்பெருமானுக்கு வைஷ்ணவர்களிடத்தில் உண்டான ஆதரத்தையும், அவர்களுக்கு எம்பெருமான் கொடுத்திருக்கும் தரத்தையும், நன்மையை விரும்புவானொருவன் அவ்வைஷ்ணவர்களின் அபிமானம் பெறுவானாகில் அவ்வபிமானம் எம்பெருமான் ‘க்ஷிபாமி’ (ஸம்ஸாரத்தில் தள்ளுவேன்) என்று சீறியபோது அநர்த்தம் வாராமல் தடுத்து உய்விக்கும் என்பதையும், அவர்கள் திறத்தில் அநிஷ்டமான கார்யத்தைச் செய்வதால் உண்டாகும் அநர்த்தங்களையும், எம்பெருமானுடைய சம்பந்த முடையார் எக்குற்றவாளரேயாகிலும் அவர்கள் திறத்தில் கூசியிருக்கவேண்டும் என்பதையும் தருமபுத்திரர் ராஜஸூயம், காண்டவதஹநம், அம்பரீஷ உபாக்யாநம், இரண்ய ராவண சிசுபால அர்ச்சுன பரத சரித்திரம்,சக்கரவர்த்தி மஹாராஜர் விருத்தாந்தம், மண்டூக உபாக்யாநம் என்ற இவற்றால் தெரிந்த வரை எடுத்துக்காட்டலாமென்று உறுதிகொண்டு இழியலானேன்.

"அத்வே ஷச்சாநு கூலச்ச திவ்ய நாம-தரஸ்ததா,
சக்ராங்கி மந்த்ரபாடீச வைஷ்ணவச்ச தத: பரம்."
"ஸ்ரீ வைஷ்ணவ இதி க்யாத: ப்ரபந்ந: ததநந்தரம்
ஏகாந்தீ பரமைகாந்தீ தசைதே வைஷ்ணவா ஸ்ம்ருதா:"

முன் பத்துவிதமாகச் சொல்லப்பட்ட வைஷ்ணவர்கள் இந்த சுலோகங்களால் குறிக்கப்படுகிறுர்கள். அவர்கள் த்வேஷமில்லாதவன், அநுகூலனுயிருக்குமவன், திவ்ய நாமத்தைத்தரிக்குமவன், சக்ராங்கி, மந்த்ரபாடீ, வைஷ்ணவன், ஸ்ரீ வைஷ்ணவன், ப்ரபந்நன், ஏகாந்தி, பரமைகாந்தி, என்று சொல்லப்படுகிற பதின்மர்களாம்.

பத்துவிதமாகப் பிரிக்கப்பட்ட வைஷ்ணவர்களுக்குள்ள த்வேஷமில்லாமை முதலிய ஜ்ஞாநமானது உருமாறிவரும்போது ஸ்நேஹம், பக்தி ப்ரீதி, என்கிற பல பெயர்களைப் பெறுகிறது. எம்பெருமானுடைய ஜ்ஞாநம் நமக்கு ஏதேனும் ஒரு வகையால் உண்டாகுமேயானுல் அது உருமாறிவரும்போது நாளடைவில் கீழ்ச் சொல்லப்பட்ட பத்துப் பிரிவுகளையும், பின் அது பக்தியாக உருமாறும் போது இரண்டு பிரிவுகளையும்விளைவிப்பதாகும். ஆக ஜ்ஞாநத்துக்கு ஜ்ஞாநாவஸ்தை என்றும், பக்தியவஸ்தை என்றும் இரண்டவஸ்தையுண்டு. ஆக பக்தியென்றும், ஜ்ஞாநமென்றும் சொல்வன ஒன்றையே குறிப்பிட்டுக் காட்டியதாகும்- அந்த பக்தியானது முதலில் விசுவாசம் (பரலோகம், தெய்வம், சாஸ்திரம் என்ற இவைகள் ஸத்யம் என்னும் நம்பிக்கை) என்கிற பெயரால் வழங்கப்பட்டுப் பிறகு சாஸ்திர பரிசயத்தாலாவது சாஸ்திரமறிந்த பெரியோர்களின் பழக்கத்தினுலாவது வளர்ந்து மேன்மேல் விளக்கத்தை யடையும் போது பல பெயர்களைப் பெறுகிறது.

அப்போது உபாயமான பக்தி என்றும், பலமான பக்தி யென்றும் பல பிரிவுகளையடையும். எவ்விதமான நன்மையாவது உயர்த்தியாவது அடைய வேண்டுமானுல் அதற்கு எம்பெருமானிடத்திலுண்டான பக்தியே சிறந்ததொரு வழியாகும். இப்படி இம்மையிலும், மறுமையிலும் எவ்வித பெருமை யடைவதற்கும் பக்தியே சிறந்த காரணமாயினும் அந்த பக்தியில் விளையும் மற்ற நன்மைகளைவிட

பகவதநுகூலனாய் வர்த்திப்பதே ஒருவனுக்கு உண்மையான உயர்த்தியாகும். அப்படி பகவதநுகூலனாய் வர்த்திக்கும் நிலையில் பக்தி ஜ்ஞாநரூபமாகும் போது கீழ்க்குறிப்பிட்டபடி பத்துவிதமாகும்.

அவற்றுள் அத்வேஷனாகையாவது:— எம்பெருமானையும், அவனடியாரையுங் கண்டுத்வேஷங்கொள்ளாதிருத்தல். த்வேஷமில்லாதிருக்கின்றமாத்திரத்தாலே வைஷ்ணவத்வ ஸித்தியுண்டாமோ வென்னில்? இவன், நெடுநாள் எம்பெருமான் குணங்களும், பெயர்களும் செவிப்பட்டவாறே த்வேஷத்தைச் செய்துபோந்தவன். த்வேஷமுள்ளபோது நன்மைபடையும்வழி புலப்படமாட்டாது. அது மாறியபொழுது நன்மையடைதற்கு ஏற்பட்டவழியில் முதலடியிட்டவனாகிறான். ஆதலால் இந்த யோக்யதை மாத்திரத்தால் அத்வேஷவைஷ்ணவத்வ ஸித்தியுண்டாகத்தடையில்லை. இந்த வைஷ்ணவத்துவ ஸித்தியுடையவன் வழி தெரியாது அலைந்துதிரியும் மற்றவர்களிலும் உயர்ந்தவனாகமதிக்கப்படுவான்.

அநுகூலனாகையாவது:— எம்பெருமானுக்கும், அவனடியார்களுக்கும் நல்லவனாயிருத்தல். இவனுக்குப் பெரியார் விஷயத்தில் நல்லவனாயிருக்கவேண்டுமென்ற நினைவுண்டாகையால், த்வேஷமில்லாமை மாத்திரமேயுள்ள அவனிலும் இவன் சிறந்தவனாவான்.

திவ்ய நாமதரனாகையாவது:— எம்பெருமானுடைய திருநாமத்தைத் தனக்குப் பெயராகக் கொண்டிருக்கை. இங்கு, பௌண்ட்ரவாசுதேவனைப்போலல்லாமல் அன்புமுன்னாக எம்பெருமானுடைய பெயரைக் கொண்டவனைக் குறித்தபடி. அநுகூல வைஷ்ணவனைக் காட்டிலும் இவனுக்கு எம்பெருமானிடத்திலும் அவனடியாரிடத்திலும் பிரீதியிருப்பதோடு அவர்கள் பூஜ்யர்களென்ற எண்ணமும் விஞ்சியிருக்கும். அதனால் அவர்களுக்குத் தாழ்ந்தவனென்ற எண்ணமும் தன்னடைவே யுண்டாகும். பின் தன்னைத் தாஸனாக நினைப்பான். தாஸன் எஜமானனுடைய பெயரை மார்பிலேறிட்டுக் கொள்ளுதல்போல இவன் எம்பெருமானுடைய பெயரையேறிட்டுக் கொண்டவனாவான். தாஸத்வத்திற்கிசைந்த இவன் சிறந்தவனென்னத் தட்டில்லை.

சக்ராங்கியாவான்:— வைஷ்ணவனுக்கே உரியதான சங்கசக்ரங்களைத் தோள்களிலும், துளஸீநளினாக்ஷ மாலைகளைக் கழுத்திலும் தரித்துக்கொண்டிருப்பவன். இவன் இந்த அடையாளங்களைத் தரித்துக் கொண்டிருக்கும்போது இவனிடத்தில் எம்பெருமானுக்கே உரியனான நிலை நன்குவிளங்கும். இங்ஙனம் உரியனாயிருக்கும் நிலையைப்பலருமறிய வேண்டி மேற்கூறிய அடையாளங்களைக் கொண்டுள்ளவனாகையால், இவன் தேவதாந்தர ஸம்பந்தத்தில் அருவருப்புடையவனாயிருப்பான். இப்படித் தெய்வமொருவனென்ற தெளிவுடையவனாதலால் இவன் நாமதாரியிலும் சிறந்தவனாவான்.

மந்த்ரபாடியாவான்:— ஈசுவரவிஷயஜ்ஞாநமே காமமாய்விளைய அதனால் 'அவனைப் பெற்றன்றித்தரியேன்' என்ற நிலைமையடைந்து அதற்குரிய சுலபமான உபாயம் யாதென ஆராய்ந்து அஷ்டாக்ஷர முதலிய பகவன்மந்த்ரங்களை ஜபித்துக்கொண்டிருப்பவன். இவன் 'ஈசுவரனைப் பெற்றாலன்றித்தரியேன்' என்ற ஆசைமிக்குடையவனாதலால் முற்கூறப்பட்டவனிலுஞ் சிறந்தவனாவான்.

வைஷ்ணவனாவான்:— இதரவிஷயங்களிற்பற்றற்று, எவ்வகைக்கடினோபாயங்களைச் செய்தேனும் ஈசுவரனையடையவேண்டும் என்ற ஆசையதிகரித்து உபாயபக்தியை அநுஷ்டிக்குமவன். இவன், இதரவிஷயங்களில் ஆசையற்று, ஈசுவரவிஷயத்தில் தீவிரமான பக்தியுடையவனாதலால் முற்கூறப்பட்டவனிலும் சிறந்தவனாவான்.

ஸ்ரீ வைஷ்ணவனாவான்:— பகவத்விஷயமான காமம் முதிர்ந்து தேஹபந்துக்கள் விஷயத்திலும் அருவருப்புடையவனாயிருப்பவன். இவன், தன் உறவினரிடத்திலும் ஆசையற்றவனாதலால் முற்கூறப்பட்டவனிலும் சிறந்தவனாவான்.

ப்ரபந்நனாவான்:— தேஹஸம்பந்தத்தால் அறியாமலாவது, மறந்தாவது வரக்கூடிய விஷயாந்தர ஸம்பந்தம் மறுவலிடாதபடி விட்டு ஸாதனபக்தியில் ஊற்றங்கொண்டிருப்பவன். இவன் தன் தேஹஸம்பந்த விஷயத்திலும் அருவருப்புடையவனாதலால்,

முற்கூறப்பட்டவனிலும் சிறந்தவனாவான். உபாயமான பக்தியில் ஊற்றங் கொண்ட இவனை ப்ரபந்நனென்று சொல்லக்கூடுமோ வென்னில்? உபாயபக்தியில் அந்வயிக்குமவனும், அந்தபக்தி பூர்த்தி யடைய வேண்டி அதுக்கு அங்கமாக ப்ரபத்தியை அநுஷ்டிக்க வேண்டும். அந்த ப்ரபத்திக்கு எல்லாக்காமங்களையும் விடுகை அங்க மாகும். ஆகையால் எல்லாக் காமங்களையும் அடியோடு விட்டு பக்தி யில் ஊற்றங் கொண்டவனை இங்குக்குறித்தபடியால் கூடுமென்க.

ஏகாந்தியாவான்:— உபாயாந்த்ரங்களை வாஸனையோடேவிட்டு எம்பெருமானையடைய அவனே உபாயமெனக் கொண்டவன். முற் குறிப்பிட்ட அதிகாரி ஸர்வேசுவரனை உபேயமாக (பலமாக) க்கொண் டவனேயன்றி உபாயமாகக் கொள்ளவில்லை. இவன் ஈசுவரனை உபாய மாகவும், உபேயமாகவுங்கொண்டு பற்றினவனாதலால் அவனிலும் இவன் சிறந்தவனாவான். இவன் ஸ்வகத ஸ்வீகார நிஷ்ட னாவான். அஃதாவது தானே எம்பெருமானை உபாயமாகப்பற்றி யிருத்தல்.

பரமைகாந்தியாவான்:— எம்பெருமானைத்தான்பற்றாமல் அவ னே தன்னைக்கைக்கொள்ள வேண்டுமென்ற நினைவுடையவனா யிருப்பவன். இவ்வதிகாரி தானாக அவனைப்பற்றும்போது பலம் தன க்கு என்கிற எண்ணமும், அதுக்காக யத்தனிக்க வேண்டுமென்கிற எண்ணமும் உண்டாகும். அப்போது தான்என்கிற அஹங்காரம் ஒழிந்ததாகாது. மேலும் அவன் ஸ்வாமி நாம் அவனுக்கு ஸ்வத்தாய்ப் பரதந்தரனாயிருக்குமவன். ஸ்வத்துக்கு ஸ்வாமியையடைய யத்ன மில்லை. ஸ்வாமி ஸ்வத்தைக்கைவிடான். அவனுக்கு நம்மையடைய வேண்டிய யத்னம் தன்னடையே உண்டு. நமக்கு இசைந்திருக்குந் தன்மையே அமையும். திரும்பு நறுக்கவும் ப்ராப்தி இல்லை என்ற அத்யவஸாய பூர்த்தியுடையவன். அஃதாவது:— ஊற்றத்தின் எல்லை

யில் நின்றவனுதலால் முற்கூறிய அதிகாரியிலும் சிறந்தவனுவான். இவ்வதிகாரியே பரகதஸ்வீகாரமுடையவன். அஃதாவது:— ஈசுவர னே தன்னைக்கைக்கொள்ள வேண்டுமென்ற கருத்துடையவன்.

இவ்வாறு பிரிக்கப்பட்ட அதிகாரிகளில் எல்லாக் காமங்களையும் விட்டு, எம்பெருமானையே பலமாகப்பற்றியிருக்கும் தன்மையுடைய அதிகாரிகள் மூவர். அவர்களாவார் பக்தியே உபாயமாக அநுஷ்டிக்கு மவனும், எம்பெருமானையே உபாயமாகப் பற்றியிருக்கும் ஸ்வகதஸ் வீகார நிஷ்டனும், அவன் விஷயீகரிப்பதை எதிர்பார்த்துக் கொண் டிருக்கும் ஸ்வப்ரவர்த்தியில்லாத பரகதஸ்வீகார நிஷ்டனும் என்ற இம்மூவர். இம்மூவருள் ப்ரபந்நன், ஏகாந்தி என்ற இவ்விருவரும் "சாஸ்திர பலம் ப்ரயோக்தரி" (சாஸ்திரா நுஷ்டானத்தா லுண்டாகும் பலம் அதையநுஷ்டிக்குமவனுக்கேயுள்ளதாம்.) என்ற முறைப்படி பலமும் அதையடைவதற்குரிய முயற்சியும் நம்முடையனவா்ம் என்ற நினைவுடையவர்கள். மூன்றுமதிகாரியாகிய பரமைகாந்திக்கு இந் நினைவுகளில்லை. சேதனனுடைய மோக்ஷார்த்தமாக யத்தனஞ் செய்யு மவன் ஈசுவரனேயாவான். இவனுக்கு அவன் ப்ரவர்த்திவிலக்காமை க்கு அநுமதிமாத்திரமே வேண்டுவது. அந்த அநுமதிக்குத்தான் இவன் சரணுகதி ஏற்பட்டது. ஆகையால் இவனுக்கு மோக்ஷார்த்த பலமும், யத்தனமுமில்லை. இவ்விரண்டும் இவன் விஷயத்தில் ஈசுவர னுக்கே உள்ளன. இவ்வாறு ஜ்ஞாநா வஸ்தையில் வைஷ்ணவர் பதின் மரா்வாரென்பது ஒருவாறு நிரூபிக்கலாயிற்று.

(தொடரும்.)

காரப்பங்காடு,

ஸ்ரீ உப. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் தமையனுர் குமாரரும்

அந்தேவாசியுமான வேங்கடாசார்யர்

சேரங்குளம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கூடல் மான்மியம்.

திரு. நா. அப்பணையங்கார்

எழுதியது.

ஹரிஸமய திவாகரப் பிரசுரம்.

மதுரை

மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பெற்றது.

1925.

விலை அணா 6.

26

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ:

முகவுரை.

தேனாருமகிழ்த்தொடையலும்மவுலியும்திருக்கிளர்குழைக்காதும்
கானாருமலர்த்திருமுகச்சோதியும்கயிரவத்துவர்வாயும்
மோனமாகியவடிவமும்மார்பமும்முத்திரைத்திருக்கையும்
ஞானதேசிகன்சரணதாமரையும்என்நயனம்விட்டகலாவே.

ஸ்ரீய: பதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், ஸ்ரீ வைகுண்ட நிகேதனனாய், ஸர்வ ரக்ஷகனான ஸர்வேச்வரன் தேசகாலாவதியின்றிக்கே ஸகலரும் தன்னை ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படி, தன் அபார கருணையாலே ஸ்வஸ்வாமிபாவத்தை மாறாடிக்கொண்டு, அர்ச்சக பராதீனனாய் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்கள் எண்ணில்லாதன உள்ளன. அவைகளுள் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற பெருமையுடன் விளங்குவன ஒரு நூற்றெட்டுத் திருப்பதிகளேயாம்.

அந் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் பாண்டியநாட்டுள்ளவை பதினெட்டு என்பர். மதுரை அல்லது கூடல் என வழங்கும் திவ்ய தேசமும் அவற்றில் ஒன்றாக எண்ணப்படும் ஏற்றமுடையது. அதுவே, "கோழியுங் கூடலுங் கோயில்கொண்ட கோவலன்" எனத் திருமங்கையாழ்வாருடைய பாடல்கொண்டது. அங்கே எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு, ஸ்ரீ சுந்தரராஜன் என்றும், கூடலழகர் என்றும், *மல்லாண்டதோளர் என்றும் பல திருநாமங்களுண்டு. அங்குள்ள பிராட்டியின் திருநாமம் ஸ்ரீ மதுரவல்லித்தாயாரென்பது.

அதுநிற்க: "பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று, ஈண்டிய சங்கம் எடுத்தோத-வேண்டிய, வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்" என்கிறபடியே பெரியாழ்வார் பரதத்வ நிர்ணயம் பண்ணியருளின ப்ரபாவமுடையதும் அந்தத்திருப்பதியே யாகும். அன்றியும், "வேதத்துக்கோமென்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்த், தான் மங்கலமாதலால்" என்னும்படி, ஸம்ஸ்க்ருத வேதத்துக்கு ப்ரணவம்போலே த்ராவிட வேதமாகிய திவ்யப்ரபந்தத்திற்குப் பாயிரமாயமைந்த திருப்பல்லாண்டவதரித்த திவ்ய தேசமும் அதுவாயிற்றென்னில், அதன் பெருமை ஒருவரால் பேசுந்தரத்தினதன்றென்பது சொல்லவும் வேண்டுமோ?

---

* மல்லாண்டதோளர் என்று மூலவரையும், கூடலழகர் என்று உத்ஸவரையும் வேறுபிரித்து வழங்குவதும் உண்டு.

இன்னும், அவ்வூரில் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள பெருமாளைக்குறித்தே, "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று பெரியாழ்வார் மங்களா சாஸனம் செய்தார் என்பதும் ப்ரஸித்தம். பிற்காலத்தில் உடையவர் திவ்யதேச யாத்ரையாக மதுரைக்கு எழுந்தருளினவாறே, 'திருப்பல்லாண்டவதரித்த ஸ்தலம்' என்று அதனை மிகவும் ஆதரித்தருளி, மல்லாண்ட தோளரைத் தாமும் 'பல்லாண்டு பல்லாண்டு' என்று மங்களாசாஸனம் பண்ணினார் என்று பிள்ளை லோகஞ்சீயர் அருளிச்செய்த ராமாநுஜார்ய திவ்ய சரிதையில் காணப்படுகிறது. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில்,-

"வாழ்விப்பான்எண்ணமோவல்வினையில்இன்னும்என்னை
ஆழ்விப்பான்எண்ணமோஅஃதறியேன் — தாழ்விலாப்
பாடலழகார்புதுவைப்பட்டாபிரான்கொண்டாடும்
கூடலழகாநின்குறிப்பு."

என்று திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்காரும் திருவாய்மலர்ந்தருளினர். "புத்தூரான் பல்லாண்டு பாடவரும் மல்லாண்டதோளனடி பணிதல் செய்வாம்" என்னும் ஆன்றோர் வாக்கும் இக்கருத்தே பற்றியுள்ளது.

அவை நிற்க. இந்த மதுராபுரியின் மாஹாத்ம்யமானது அஷ்டாதச புராணங்களுள் ஒன்றான ப்ரஹ்மாண்ட புராணத்தில், பன்னிரண் டத்தியாயங்களாற் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதனை மூலமாகக்கொண்டு, பிற்காலத்திற் சிறந்த புலவர் ஒருவரால் "கூடற்புராணம்" என்று ஒரு நூல் தமிழில் கவிரூபமாக இயற்றப்பெற்றுள்ளது. அதுவும் சமீபகாலத்தில்தான், மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால், செந்தமிழ்ப் பத்திரிகையின் வாயிலாக வெளியிடப்பட்டது.

அதனை இயற்றிய ஆசிரியரது ஊர், பெயர் முதலியன ஒன்றும் விளங்கவில்லை. ஆயினும் அதில் அமைந்துள்ள சொல்லணி, பொருளணி, கற்பனை முதலிய பல நயங்களையும் நோக்குமிடத்து, அது ஒரு சிறந்த நூலேயாகுமென்பது சிறிதும் ஐயமின்றித் தெளியக் கிடக்கிறது. அன்றியும் அது முதனூலாகிய வடமொழிப் புராணத்தைப் பெரும்பாலும் தழுவியே செல்லுகின்றதென்பதும் அறியத்தக்கது. ஆனாலும், தமிழ்ப்புராண முறைக்கேற்ப, சுவை பயக்குமாறு ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம், நீர் விளையாடல், உண்டாட்டு முதலிய சிற்சில பகுதிகளை அதனுள்

மிகுத்துக் கூறப்பட்டனபோலும். அந்நூல் பதினைந்து படலங்களில் எழுநூற்றைம்பது செய்யுட்களுடையதாகப் பாடப்பட்டிருக்கிறது. அப் பதினைந்து படலங்களும் கிருதகாண்டம், திரேதகாண்டம், துவாபரகாண்டம், கலிகாண்டம் என்னும் நான்கு காண்டங்களில் அடங்குகின்றன. அவ்வக் கதைகள் நிகழ்ந்த காலம் பற்றி அவ்வக் காண்டங்கள் பெயர்பெற்றனவென்று தோன்றுகிறது. அதனால் ஈசன் தவம்புரிதல் முதல் கர்சிபன் முதலாயினோர் வரம் பெறுதல் ஈறாகவுள்ள செய்திகள் கிருதயுகத்தில் நிகழ்ந்தன என்றும், பிருதுச்சக்ரவர்த்தி பூஜித்தலும், காலநேமியை வதைத்தலும் திரேதாயுகத்தில் நிகழ்ந்தன என்றும், புலஸ்தியருக்குப் புதல்வனை யளித்தலும் அம்பரீஷனுக்கு அருள்புரிதலும் துவாபரயுகத்தில் நிகழ்ந்தன என்றும், ஊர்வசி சாபநீங்குதல்முதல் பட்டர்பிரான் பொற்கிழி பெறுதல் முடியக் கலியுகத்தில் நிகழ்ந்தன என்றும் அறிந்துகொள்ளலாம்.

இனி, அக் 'கூடற்புராணம்' தமிழ்ச்செய்யுள் நடையிற் பயிற்சியுடையார்க்கன்றி எல்லார்க்கும் எளிதிற் பொருள்விளங்காதிருப்பது கருதி, அதனையே ஆதாரமாகக்கொண்டு 'கூடல்மான்மியம்' என்னும் பெயருடன் இச்சிறு புஸ்தகம் இப்பொழுது என்னால் எழுதலாயிற்று. இது தனக்கு மூலமான கூடற்புராணத்தின் போக்கைப் பெரிதும் அடியொற்றிச் செல்லுவதாயினும், வசன நடைக்கேற்பச் சிற்சில மாறுதல்கள் இதன்கண் இன்றியமையாவாயின. என்றாலும் மூலத்தில் இல்லாத விஷயங்கள் சிறிதேனும் இதிற் புகுத்து எழுதப்படவில்லையென்று உறுதியாய்ச் சொல்லலாம். அது நிற்க.

மிகச் சிற்றறிவுடைய என்னால் மேற்கொள்ளப்பட்ட இக் காரியத்தில் எண்ணில்லாத பிழைகள் இடம்பெற்றுள்ளனவென்பது சொல்லாமையே அமையும். ஆதலால் அக்குற்றங் குறைகளைப் பொறுத்தருளுமாறு கற்றறிந்த பெரியோரைப் பலமுறையும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். இச்சிறு கைங்கர்யத்தை அடியேன் இயற்றுமாறு அநுக்ரஹித்த ஸ்ரீ கூடலழகப் பெருமானுடைய திருவடிப்போதுகளையே எப்போதும் சிந்தித்து வாழ்த்துவேனாக.

மதுரை,
10—2—25.

இங்ஙனம்,
திரு. நா. அப்பனையங்கார்.

ஸ்ரீ:

சிறப்புப்பாயிரம்.

கோபாலசமுத்திரம் ஹைஸ்கூல் தமிழாசிரியர்
ஸ்ரீமத். வெ. ராமையங்காரவர்கள் இயற்றிய
நிலைமண்டில ஆசிரியப்பா.

திருமக ளுறையும் செந்தேன் பில்கிய
மருவளர் துளவ மாலைமார் பகமும்
சதுமுகத் தொருவனும் புதுமலர்க் கொன்றை
மதியொடு மிலைச்சிய நதிபொதி சடையனும்
அருக்கர்பன் னிருவரும் உருத்திரர் வசுக்கள்
மன்பதை வெள்ளம் மாமுனி யிட்டமற்
றியாரு மியாவும் எவ்வகை உலகும்
தந்தருள் உந்தி அந்தா மரையும்
மூவுல களந்த சேவடி மலரும்
ஆழி முதல ஐம்படை தாங்கிய
பாழியந் தோளுமீ ரேழுல குங்கொழும்
பத்திமிக் குயர்ந்த உத்தமக் கவிகள்
பதின்மரும் பணித்த பாடற் றீந்தேன்
பருகிக் களிகூர் இருகுழைக் காதும்
அண்டம் அனைத்தும் உண்டசெவ் வாயும்
உடையான் அசுரர்க் குடையான் குன்றக்
குடையான் முத்திக் கொடையான் அத்தி
மூல மேயென் றோலமிட் டாற்றிய
காலமுன் நின்றதன் ஆரிடர் களைந்த
பீதக வாடைப் பெருமான் உறையும்
மேதகு வேங்கடம் விண்ணோர் ஏத்தும்
கச்சி அரங்கம் கவின்விடை மலைமுதல்
இச்சகம் எல்லாம் மெச்சுபல் பதிகளுள்
வேதப் பொருளாய் விளங்குபத் திருமால்
ஆதியில் மீனாய் அவதரித் ததுவும்
கிருதமா லாநதி இருதலை யுறுவதும்
மல்லி நாடுசெய் எல்லையில் தவத்தால்

வந்தவ தரித்த மாநில மடந்தையைத்
தந்தையாய் வளர்த்த அந்தணர் பெருமான்
பரத்துவ நிச்சயம் பண்ணப் பெற்றதும்
திருப்பல் லாண்டின் பிறப்பிட மானதும்
கீரனே முதலோர் பேரவை இருந்தொண்
தீந்தமிழ் பலவாண் டாய்ந்த நற்பதியுமாம்
பாடல்சால் சிறப்பிற் கூடல்மா நகரின்
மான்மியந் தன்னை யாவரு மறியச்
சொற்பொருள் நயத்தொடு துய்யநன் னடையும்
கற்பனை அழகும் ஒப்பனை பிறவும்
பொற்புற விளங்கும் நற்றமிழ் நடையால்
அமைத்தனன் வாழி அந்தணர் மரபில்
பலர்புகழ் பெருமைப் பாரத்து வாசி
மதுரைமா நகரின் முதுதமிழ் வளர்ச்சி
கண்டிடு நான்காந் தண்டமிழ்ச் சங்கத்
தொண்டமி ழாய்ந்து கொண்டுசெந் தமிழும்
விளங்கவிற் றிருந்தே வளங்கொள்தொன னூற்பொருள்
உளங்கொளப் பல்லோர்க் கொளிபெற உணர்த்தியும்
அரசிளங் குரிசில்முன் பரிசில்கொண் டிலகுந்
திருநா ராயணன் எனப்பெயர் சிறந்தோன்
அன்னவன் தனக்குத் தன்னிகர் மகவாய்த்
தவப்பய னென்ன உவப்பவர் துதித்துச்
செப்புபல் கலைகளிற் றேர்ச்சியுற் றிலங்கி
ஒப்பில்பல் குணங்கட் குறையுளாய் விளங்கும்
அப்பனெனும்பெய ரறிஞ ரேரே.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

ஸ்ரீ:

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	20	க்ரஹஸ்தம்	கார்ஹஸ்த்யம்
10	8	கொண்டதாகச்	கொண்டதைக்
12	19	பொன்னுரைத்தாற்போல	பொன்னுறைத்தாற்போல
17	22	காகுத்ஸ்தன்	திருமால்
18	24	கௌஸ்துவாபரணம்	கௌஸ்துபாபரணம்
20	9	மூதலான	முதலான
34	28	சாமீபமும் சேர	சாமீப்யமும் அடைய
38	25	கொண்டணையால்	கொண்டலணையான்
39	3	சூழ்ந்து நிறுறு	சூழ்ந்து நின்று
,,	25	தேறில்	தேரில்?
40	27	அவர்	அவன்
,,	,,	ப்ரயோகித்தார்	ப்ரயோகித்தான்
42	8	மஹாத்ம்யத்தை	மாஹாத்ம்யத்தை
43	28	அரசனிடம்	அரனிடம்
51	2	உலகனைத்தையும்	உயிரனைத்தையும்

பக்கம் 17, வரிகள் 11, 12-ல் “அவள் இப்போது பாண்டிய னாட்டை அடைந்து அங்கயற்கண்ணி என்னும் பெயர்வாய்ந்து விளங்குகிறாள்” என்றுள்ள வாக்கியத்தை நீக்கிவிடுக.